தமிழ் மொழிபெயர்ப்பு

# சுற்றுநிருப இலக்கம்:-06/2016


මගේ අංකය
எனது இல.
My No. RG/MBD/01/2012

ඔබේ අංකය
உமது இல
Your No.

දුරකතන අංක
தொலைபேசி இல
Telephone Nos 2888488 / 2889489

ෆැක්ස් අංක
தொலை நகல்
Fax No 2889491 / 2889492

ඊ-මේල්
மின்னஞ்சல்
E-mail rgd@sltnet.lk

රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
பதிவாளர் நாயகம் திணைக்களம்
REGISTRAR GENERAL'S DEPARTMENT

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
HEAD OFFICE

වෙබ් අඩවිය
இணைய தளம்
Web Site www.rgd.gov.lk

තැ.පෙ.අංකය.
த.பெ.இல.
P.O.Box No.

234/ඒ3
ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත
බත්තරමුල්ල.
234/ஏ3 டென்சில் கொப்பேகடுவ
மாவத்தை, பத்தரமுல்ல
234/A3
Densil kobbakaduwa Mawatha
Battaramulla


දිනය/திகதி/Date 2016.07.25

அனைத்து மாவட்ட பதிவாளர்/ பிரதேச செயலாளர்கட்கு,

அனைத்து மேலதிக மாவட்ட பதிவாளர்கட்கு.

## <u>பால்மாற்றத்திற்குள்ளான (திருநங்கை) நபர்களின் பிறப்புச் சான்றிதழ்களில் பெயர் மற்றும் பால்தன்மையினை திருத்தம் செய்தல்</u>

பால்மாற்றம் (திருநங்கை) என்பது ஆண்பால் பெண்பால் பற்றிய சமூக தன்மை பற்றிய அவர்களின் உள்ளார்ந்த உணர்திறன் , தான் பிறப்பினால் பெற்ற பால் இயல்பில் மாற்றம் தெரியும் அனைத்து நபர்களுக்காகவும் ஏற்படும் விரிவான தன்மை என கருதப்படும். இவ்வாறான நபர்களுக்கு சமூகரீதியாக ஏற்படும் நானாவித சிக்கல்களினை குறைப்பதற்காக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டின் பேரில், சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மூலம் " பாலின அங்கீகாரச் சான்றிதழ்", சுகாதாரம் -1257 படிவத்தினை வழங்குவதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 01-34/2016 மற்றும் 2016/06/16 ந் திகதிய சுற்றுநிருபத்தின் மூலம் ஆலோசனை தரப்பட்டுள்ளது. அந்த சுகாதாரம் - 1257 படிவத்தின் பிரதிகள் தங்களது தகவலுக்காக இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

02. ஆகையினால் பால்மாற்றம் மூலம் தமது பிறப்புச் சான்றிதழில் ஆண்/ பெண் பால் தன்மை மற்றும் பெயரினை திருத்தம் செய்வதற்கு 52(i) பிரிவு மற்றும் 27 ஆம் பிரிவின் கீழ் பிரதிக்கினையினை சமர்ப்பிக்கும் பொழுது சுகாதாரம் - 1257 உடைய பாலின அங்கீகாரச் சான்றிதழினை எழுத்து மூலமான சாட்சியாக கோவைப்படுத்தி, உரிய திருத்தத்தினை சிபாரிசு செய்வதற்கும், அச்சான்றிதழ்களில் பேரில் உரிய திருத்தத்தினை செய்வதற்கும் அதிகாரம் தருமாறு தெரிவிக்கின்றேன். உரிய பிரதிக்கினையுடன் சுகாதாரம் - 1257 சான்றிதழினை பிறப்புச் சான்றிதழின் இரண்டாம் பிரதியுடன் இணைத்து வைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்:- ஈ.எம். குணசேகர
பதிவாளர் நாயகம்

பிரதிகள்:-

1. செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு - தகவலுக்காக
2. செயலாளர், மனித உரிமைகள் ஆணைக்குழு - தகவலுக்காக
3. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக
4. அனைத்து மாவட்ட செயலாளர்கட்கு/ மேலதிக பதிவாளர் நாயகங்கட்கு - தகவலுக்காக
5. உதவி பதிவாளர் நாயகம், மத்திய பதிவேட்டறை - உரிய நடவடிக்கைக்காக
6. வலய பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்கட்கு - மேற்பார்வைக்காக
7. அனைத்து காணி பதிவாளர் மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர்கட்கு - தகவலுக்காக